**யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - 2021**

---------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

--------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக் கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

----------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை
--------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,
- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இல | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7, பந்தி 65ன் படி நிலையான சொத்துக்களின் | ஈடுபடுத்தப்பட்ட சொத்துக்களின் எண்ணிக்கை, ஏற்படும் செலவினம் மற்றும் நேரத்தைச் செலவழிக்கும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பயனுள்ள ஆயுட் காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படாது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்ட ரூ.78,957,863 மதிப்புள்ள வாகனங்கள் மற்றும் ஆடைகள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3க்கு இணங்க மதிப்பிடப்பட்ட பிழையை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செலவு மாதிரி மற்றும் தேய்மானக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான கொள்கையைத் தொடங்குவதற்கு, ஆளுகை சபையின் பரிந்துரை மற்றும் யுஜிசி யின் ஒப்புதலுடன் நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் முறைக்கு மாற எண்ணியுள்ளது. | நியமத்துடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பத்தி 47 இன் படி, மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதி அதன் கீழ் கொண்டு வரும் தொகையில் இருந்து பாரியளவாக வேறுபடும் போது, மற்றும் மறுமதிப்பீடு அவசியமாகும்போது ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கும் உருப்படியை மறுமதிப்பீடு செய்வது அவசியமாகும். எவ்வாறாயினும், 7,288,976,743 மொத்தத் தொகையுடைய ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் 2014 முதல் கடந்த 7 ஆண்டுகளாக மறுமதிப்பீடு செய்யப்பபட்டிருக்கவில்லை. | ஈடுபடுத்தப்பட்ட சொத்துக்களின் எண்ணிக்கை, ஏற்படும் செலவினம் மற்றும் நேரத்தைச் செலவழிக்கும் நடவடிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செலவு மாதிரி மற்றும் தேய்மானக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான கொள்கையைத் தொடங்குவதற்கு, ஆளுகை சபையின் பரிந்துரை மற்றும் யுஜிசி யின் ஒப்புதலுடன் நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் முறைக்கு மாற எண்ணியுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |
| (இ) | யப்பான் சர்வதேச அபிவிருத்திக்கான முகவராண்மை மற்றும் உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ஊக்கப்படுத்தல் திட்டங்களில் இருந்து பெறப்பட்ட ரூ.2,421,636,621 மதிப்புள்ள சொத்துக்கள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் அடிப்படையில் பின்னோக்கிச் சரிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் வருவாய் என நிதி செயலாற்றுகை கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 10 மற்றும் 11 இன் படி பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெறப்பட்ட வருமானம் குறிப்பிட்ட ஆண்டில் மட்டுமே வருமானமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இருந்தபோதிலும் 2021ஆம் ஆண்டுக்கு முன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, உபகரணங்களைப் பெற்றாலும், உத்தியோகபூர்வ சொத்துக்களை கையளிப்பது 2021 இல் தான் நடைபெற்றது. எனவே, மேற்கூறிய நியமங்களின் படி 2021 ஆம் ஆண்டில் கணக்குப் புத்தகத்தில் இந்த கொடுக்கல் வாங்கல்களில்களுக்கு முறையான கணக்கியல் செய்யப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 18 இன் தேவைப்பாட்டிற்கமைய நிதி நிலைமை கூற்றில் உயிரியல் சொத்துக்களான கால்நடைகளின் திரட்டப்பட்ட பெறுமதி ரூ.2,541,450 நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் தனியாக வெளிப்படுத்தப்படவில்லை. அதற்கு பதிலாக, அது ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்டது. இதன் விளைவாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பு அதே அளவினால் கூட்டிக்காட்டப்பட்டது. | எதிர்காலத்தில் கால்நடைகளை நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் தனி உருப்படியாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் திறைசேரியிலிருந்து மூலதன மானியமாக பெறப்பட்ட ரூ.40,972,090 தொகை எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 11 இன் படி வருமானமாக அங்கீகரிக்கப்படவில்லை. அதன் விளைவாக, ஆண்டிற்கான செயல்பாட்டு நடவடிக்கைகளின் மிகையானது நிதிக்கூற்றிலுள்ள அதே தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | முகாமை கருத்து தெரிவிக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 முதல் 26 ஆண்டுகள் வரை நிலுவையில் உள்ள ரூ.1,168,318 இடர் கடன் நிலுவைத் தொகையானது வசூலிக்கப்பட முறையான நடவடிக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவைகளாக காட்டப்பட்டிருந்தது. | இந்த ஊழியர்களின் பணிக்கொடையில் இருந்து இந்த நிலுவைத் தொகையை விரைவில் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை உரிய காலத்தில் வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுய முதலீட்டு கற்கைநெறிகளின் கீழ் ஆம்ஸ்டர்டாம் பல்கலைக் கழகத்தின் ட்ரீகுறப் பிஸ் திட்டமாக நடைமுறை பொறுப்புகளில் செலுத்த | கொடுக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே நிதி பயன்படுத்தப்படும். இந்த நிதியின் மீதி தொகையை அது கோரப்படும் போது செலுத்தப்பட வேண்டும் என்பதால் | தீர்க்கப்படாத நிலுவைகளை பயன்படுத்த பொருத்தமான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வேண்டிய சுயநிதி கற்கைநெறிகளின் கீழ் காட்டப்பட்ட ரூ.1,591,323 தொகையானது 01 முதல் 05 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது. | நடைமுறை பொறுப்புகளின் கீழ் வைத்திருக்கபடுகிறது. | எடுக்கப்பட வேண்டும். |

1.7 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி | | | | |
| (i) | நிதி ஒழுங்குவிதி 267 | 45 சந்தர்ப்பங்களில் 2021 தை, மாசி மற்றும் கார்த்திகை மாதங்களில் ஊழியர்களிடம் இருந்து கையொப்பம் பெறாமல் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மீளாய்வு ஆண்டில், சம்பளம் பெறுபவருக்குப் பதிலாக வேறு ஒருவரால் கையொப்பமிட்டு சம்பளம் பெறப்பட்ட 173 சந்தர்ப்பங்களும் காணப்பட்டிருந்தது. | இந்த செயல்முறையை நெருக்கமாக கண்காணிக்க சரியான உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (ii) | நிதி ஒழுங்குவிதி 371(2) | ❖ 270 சந்தர்ப்பங்களில், மொத்தமாக ரூ.7,270,301 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உப கட்டுநிதி உரிய திகதிகளில் செலுத்தப்படாதுடன் 11 நாட்கள் முதல் 161 நாட்கள் வரை காலதாமதமாகியே தீர்ப்பனவு செய்யப்பட்டது. | கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களின் முன்பணத்தை சரியான நேரத்தில் செலுத்துவதற்கு அவர்களுக்கு கற்பிக்க உள்ளக நிதி சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. | நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வேண்டும். |
| | | ❖ 20 நிகழ்வுகளில், பொது திறைசேரியின் முன் அதிகாரத்தைப் பெறாமலேயே திரட்டப்பட்ட ரூபா 3,147,017 நிமிர்த்த முற்பணமானது வழங்கப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்கு கற்பிப்பதற்காக ஏற்கனவே உள்ளக நிதிச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் முற்பணங்களை கண்டிப்பாக | நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவும் உரிய வழிமுறைகள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகை கையேட்டின் பிரிவு 5.3.11 (பொருட்கள் மற்றும் வேலைகள்) | அழைப்பு வாகனங்களுக்கான விலை கேள்வியை பெறும்போது, மீளாய்வு ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 விலை கேள்விதாரர்களிடமிருந்து விலை கேள்வி பாதுகாப்பு பெறப்படவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கான திணைக்கள பெறுகை குழுவால் அழைப்பு வாகனத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | பெறுகை கையேட்டுடன் இணங்க வேண்டும். |

2. நிதி மீளாய்வு
-----------------

2.1 நிதி விளைவுகள்
---------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,250,028,585 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 966,484,640 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 3,216,513,225 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியங்கள் மற்றும் பரிமாற்றத்தகாத நடவடிக்கையிலிருந்தான மூலதன வருமானம் என்பவை அதிகரித்தமை முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு
---------------------------

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்
----------------------------------------------

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புலமைப்பரிசில் திட்டங்களில் வெளிநாடு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் அறுபத்தொன்பது கல்விசார் ஊழியர்களும் இருபத்தொரு கல்விசாரா ஊழியர்களும் புலமைப்பரிசில்களை முடித்து கடமைக்கு சமூகமளிக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்து 1983 முதல் 2021 வரையான காலப்பகுதியில் கூட்டுமொத்தம் ரூ.71,019,495 ஆதன பிணைகளை மீளப்பெறுவதற்கு பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட | கல்வி சார் ஊழியர்கள் சாத்தியமான சட்ட நடவடிக்கைகளுக்கு கவுன்சிலுக்கு பரிந்துரை செய்ய, வழக்கு அடிப்படையில் விரிவான ஆய்வை மேற்கொள்ள, உதவிப் பதிவாளர்.'.சட்டம் மற்றும் ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வி சாரா ஊழியர்கள் இந்த ஊழியர்களுக்கான பணிக்கொடை மற்றும் யூபிஎப் இன்னும் பல்கலைக்கழகம் வழங்கவில்லை மற்றும் நிதி பல்கலைக்கழகத்திடம் உள்ளது. இந்த ஊழியர்கள் தங்கள் யூபிஎப் ஐக் கோரும் | பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து முறிகளை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. | போதெல்லாம் நிலுவைத் தொகையை வசூலிக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | தாவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் 26 டிசம்பர் 2018 முதல் தனது பதவியை ராஜினாமா செய்வதற்கான அனுமதியைப் பெற்று, அனுமதியை ஒப்புக்கொண்டார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் ஸ்தாபனக் குறியீட்டின் அத்தியாயம் ஏ இன் பிரிவு 4.5(ஊ) க்கு மாறாக, தனது ராஜினாமாவை திரும்பப் பெற்ற அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார். எவ்வாறாயினும், அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டதில் இருந்து, பல்கலைக்கழகத்தால் தொடர்ச்சியான சேவையைப் பெறாமல், சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூ.12,451,000 செலுத்தப்பட்டிருந்தது. அவர் தனது பதவியை முறையாக ராஜினாமா செய்திருந்தாலும், அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட நாளிலிருந்து முறையே 07 ஆண்டுகள் மற்றும் 06 ஆண்டுகள் நிறைவடையாமல் ஏழாட்டை விடுமுறை மற்றும் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | அவர் தனது சேவையின் தொடர்ச்சியை இழக்கவில்லை, இதனால் ஓய்வுக்கால விடுமுறைக்கான அவரது உரிமை சாதகமாக பரீட்சிக்கப்பட்டு ஏழாட்டை விடுமுறை வழங்கப்பட்டது. மேற்கூறிய நியாயத்தின் அடிப்படையில் வாகன அனுமதி மற்றும் ஏனைய சலுகைகளும் அவருக்கு வழங்கப்பட்டன. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன கோவையுடன் இணங்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழகத்தின் ஏழு கல்வி ஊழியர்கள் குறிப்பிட்ட படிப்பு விடுமுறை காலத்திற்குள் முதுகலை பட்டப்படிப்பை முடிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீண்டும் பணியைத் தொடர்ந்திருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 05 மாசி 2010 திகதிய 920 ம் சுற்றறிக்கை மற்றும் உடன்படிக்கைகளின் உட்பிரிவு வாக்கியம் 14 (ஏ) இன் படி, 2018 முதல் 2021 வரையிலான காலத்திற்கான ரூ.26,969,765 செலவினத் தொகையை அந்தந்த ஊழியர்களிடமிருந்து வசூலிக்க பல்கலைக்கழகத்தால் உரிய நடவடிக்கை எடுக்கபடவில்லை. | கடப்பாட்டு தொகையை செலுத்துமாறு கோரி சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு அவர்களின் உத்தரவாதிகளுக்கு பிரதியிட்டு கடிதம் அனுப்ப ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பணம் செலுத்தத் தவறினால், கவுன்சிலின் ஒப்புதலுடன் பதவி வறிதாக்கல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து பிணைகளை அறவிட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.2 றைப்பயன்பாடுடைய நிதியங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் ஊக்குவிப்புக்காக நலன்விரும்பிகளிடமிருந்து அறக்கட்டளை நிதியாக கூட்டுமொத்தம் ரூ.345,359,916 தொகை பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டில், மேற்கண்ட 204 நிதியங்களுக்கு வட்டியாக ரூ.8,823,834 பெறப்பட்டது. ஆனால் அந்த வட்டியில் ரூ.6,041,617 அல்லது 68 சதவீதம் வங்கி நடைமுறை கணக்கில் பயன்படுத்தப்படாமல் உள்ளது. | ஒவ்வொரு மாத நிதிக் குழுவிலும், ஆளுகை சபை கூட்டத்திலும், அறக்கட்டளை நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது. | நன்கொடைகளை பயன்படுத்த பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில், குறிப்பிட்ட செயல்படுத்தலுக்காக மறைந்த கார்த்திகேசன் தமிழிசை நம்பிக்கை நிதியமாக மற்றும் மறைந்த கார்த்திகேசன் தமிழ் நூலக நம்பிக்கை நிதியமாகவும் ரூ.53,246,276 தொகை நன்கொடை வழங்கப்பட்டது. ரூ.184,476,087 வட்டியாகப் பெறப்பட்டிருந்தாலும், நன்கொடை அளித்த ஆண்டிலிருந்து ரூ.167,160,640 அல்லது 91 சதவீதம் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. | நிதியில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றது மற்றும் அந்த அளவுகோல்களை திருப்திப்படுத்த முடியாதுள்ளது. மேற்கூறிய தடையின் காரணமாக நிதியைப் பயன்படுத்துவது மிகப்பெரிய சவாலாக மாறியது. ஆனால், கந்தையா கார்த்திகேசன் நம்பிக்கை நிதிய குழு, நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் நிதியைப் பயன்படுத்துவதற்கும் கலந்தாலோசித்து நிபந்தனைகளை மாற்ற முடிவு செய்திருந்தது. | நன்கொடைகளை பயன்படுத்த பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.3 செயற்திட்ட தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூ.28,805,000 மதிப்பீட்டு கிரயமுள்ள 14 சிறு பராமரிப்புப் வேலைகளை முடிப்பதற்காக ரூ.2,591,400 முதல் தவணைப்பணமாக பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவுக்கு செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், 2021 டிசம்பர் 31ம் திகதி வரை பராமரிப்பு வேலைகள் தொடங்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டில் அந்த அலகு முடிக்க வேண்டிய ரூ.29,411,000 | கோவிட் 19 நிலைமை மற்றும் பிற எதிர்பாராத சூழ்நிலைகள், ஒப்பந்ததாரர்களால் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க முடியவில்லை. பராமரிப்புக் கிளையால் நிர்வகிக்கப்படும் அத்தகைய புனர்நிர்மாண பணிகளுக்கான ஒப்புதல் துணைவேந்தரிடமிருந்து பெறப்பட்டு, நிதிக் கிளையால் மூலப்பொருட்கள் வாங்கப்படுகின்றன. பணிகள் முன்னுரிமை அடிப்படையில் தொடங்கப்பட்டன. மற்றும் பணியை செயல்படுத்த / தொடங்குவதற்கான வேலைத்தளத்தில் பொருட்கள் உள்ளன. | கட்டுமானப் பணிகள் குறித்த நேரத்தில் தொடங்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவான 11 பராமரிப்பு வேலைகளின் முடிக்கப்படாததன் சதவீதம் 27 முதல் 100 வரை இருந்தது. | | |

3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்
------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைதடி சித்த மருத்துவப் பிரிவில் 2015 ஆம் ஆண்டு நடுவர் கட்டணம், வட்டி மற்றும் வட்டிக்கான வட்டி உட்பட ரூ.93.7 மில்லியன் செலவில் மூன்று மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது. 2021 டிசம்பரில் நடத்தப்பட்ட கணக்காய்வு ஆய்வின்படி, முழுமையடையாத பணிகள் மற்றும் கிடைமட்ட பிளவு, பெரும்பாலான சுவர்களில் மழை நீர் சொட்டுதல் மற்றும் 6 ஆண்டுகளுக்குள் சுவர்களில் பூஞ்சை தோன்றுவது போன்ற பாரிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | 2015 நவம்பரில் சில குறைபாடுகளுடன் கட்டிடத்தை ஒப்பந்ததாரர் ஒப்படைத்தார் மற்றும் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் குறைபாடுகளை சரிசெய்ய ஒப்பந்ததாரர் தவறிவிட்டார். இந்த திட்டத்தை செயல்படுத்தும் போது சில ஒப்பந்த சிக்கல்கள் இருந்தன. இறுதியில் ஒப்பந்ததாரர் 5 ஒப்பந்த தகராறுகளை தீர்ப்பாளரிடம் பரிந்துரைத்துள்ளார்.<br>ஐந்து மாடி கட்டிடத்தில் இன்னும் இரண்டு மாடிகள் கட்டப்பட வேண்டியிருந்தது. ஆனால் 2021 ஆம் ஆண்டில் நிதி அமைச்சினால் கட்டுமானத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டது. இதனால் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லை. | குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும். |

3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்
----------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தில் உள்ள பத்து பீடங்கள் மற்றும் கல்வி அலகில் காணப்படும் பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் விரிவுரையாளர் போன்ற முக்கிய கல்விப் பதவிகளில் 165 வெற்றிடங்களை பல்கலைக்கழகம் நிரப்பியிருக்கவில்லை. | பேராசிரியர், இணைப் பேராசிரியர் போன்ற சில முக்கிய கல்வி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனைத்து முயற்சிகளையும் பல்கலைக்கழகம் எடுத்துள்ளது. ஏனெனில் பலமுறை விளம்பரம் செய்தாலும் தேவையான தகுதிகளுடன் விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் கல்வித் திட்டங்களை இடையூறு இன்றி மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகம் தற்காலிக விரிவுரையாளர்கள், தற்காலிக வழிகாட்டுனர்கள் மற்றும் தற்காலிக செய்முறைகாட்டுனர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப முயற்சி செய்ய வேண்டும். |